(ஈ) மனுக்கள் குழு உறுப்பினர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 261(1)-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1989-90 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவிற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1. திரு. இளம்வழுதி
2. திரு. எஸ். பி. கண்ணன்
3. திரு. அ. மலர்மன்னன்
4. திரு. ஆச்சியூர் எம். மணி
5. டாக்டர் கோ. நந்தகோபாலகிருட்டிணன்
6. திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்
7. திருமதி பி. லட்சுமி
8. திரு. ஆ. பாலையா
9. திருமதி பாப்பா உமாநாத்
10. திரு. கோ. பூவராகன்
11. திரு. பி. என். வல்லரசு

பேரவையின் 261(2)-வது விதியின் கீழ், திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

6. கவன ஈர்ப்பு

(அ) கோவை மாவட்டம், பிள்ளையார்புரத்தில் வீடுகளும் கிருத்துவ ஆலயங்களும் இடிக்கப்பெற்றுள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத்தலைவர்அவர்களே, ''கோவை மாவட்டம் குறிச்சி அருகே பிள்ளையார்புரம் என்ற கிராமத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்தவர்களின் வீடுகளையும் இரண்டு கிருத்துவ ஆலயங்களையும் 31-3-1989 ஆம் நாளன்று இடித்தது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.